# குடிவரவு மேல்முறையீட்டு வாரியம் (UNE)

குடிவரவு மேல்முறையீட்டு வாரியம், UNE ஆனது வெளிநாட்டவர் திணைக்களத்தால் (UDI) குடிவரவு மற்றும் பிரசாவுரிமை சட்டங்களுக்கு அமைய மறுத்துரைக்கப்பட்ட விண்ணப்பங்கள் சம்பந்தமான முறையீடுகளை கருத்தில் கொள்ளும் நீதிமன்றம் போன்ற நிர்வாக அமைப்பாகும். UNE நிர்வாகரீதியாக நீதி மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்குக் கீழே வருகிறது. இந்த அமைச்சானது, சட்டங்கள், விதிமுறைகள், வரவு செலவு திட்டம் மற்றும் பொதுவான முன்னுரிமைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே இயங்குகின்ற போதிலும், சட்டவிளக்கங்கள்பற்றியோ, விவேகமான முடிவுகள் எடுப்பது சம்பந்தமாகவோ அல்லது தனிப்பட்ட வழக்குகளின் தீர்மானங்கள்பற்றியோ UNEஐ எந்த விதத்திலும் கட்டுப்படுத்த முடியாது.

தஞ்சம், குடும்ப குடியேற்றம், குடியுரிமை, பிரசாவுரிமை பற்றிய விடயங்களை UNE கவனிக்கும்.

350 பணியாளரைக் கொண்ட UNEயில் பணியாற்றும் 30 வாரியத்தலைவர்கள் நீதிபதிகளுக்குரிய தகைமைகளைக் கொண்டவர்கள். இது தவிர, 300 தன்னார்வலர்கள், இந்த மேல்முறையீட்டு வாரியத்தில் அங்கத்தவர்களாக உள்ளார்கள்.

UNE தனது முடிவுகளை ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் மேற்கொள்ளலாம். சம்பந்தப்பட்ட முறையீட்டயளரின் நேரடி விசாரணையின் அடிப்படையில், அல்லது முறையீட்டாளரின் நேரடி வருகை இல்லாமல் வாரியத்தின் கூட்டத்தில், அல்லது செயலகத்தின் உதவியுடன் வாரியத்தின் தலைவரால், அல்லது செயலகத்தால் தீர்மானங்கள் நிறைவேற்றப்படலாம். வாரியத்தலைவர், குறிப்பிட்ட விடயத்தில், எந்த விதத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படலாம் என்பதை முடிவு செய்வார்.

குடிவரவு சட்டத்தின்படி, குறிப்பிடத்தக்க அளவில் சந்தேகங்களில்லாத முறையீடுகளில், வாரியக் கூட்டம் நடாத்தப்படாமலே, வாரியத்தலைவாராலோ அல்லது செயலகத்தாலோ தீர்மானம் மேற்கொள்ளப்படலாம். இதற்கு உதாரணமாக, சட்டம், விதிமுறைகளுக்கமைய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதா என்பதை மட்டுமே ஆராயப்பட வேண்டிய அவசியமுள்ள விதிமுறை அடிப்படை முறையீடுகளைக் குறிப்பிடலாம். சரியான விதத்தில் விண்ணப்பம் அனுகப்பட்டிருக்கிறதா என்பதில் பெருமளவு சந்தேகம் இருக்கும்பட்சத்தில், அத்தகைய முறையீடுகளை ஆராயவே, முதன்மையாக மேல்முறையீட்டு வாரியத்தின் கூட்டம் ஒழுங்குபடுத்தப்படும்.

பெரும்பாலான மேல்முறையீட்டு வாரியத்தின் கூட்டங்கள் சம்பந்தப்பட்ட முறையீட்டாளரின் நேரடி வருகையினதும் விசாரணையினதும் அடிப்படையில் அமைகிறது. இருப்பினும், முறையீட்டாளரை நேரடி வருகைக்கு அழைக்காமலே, மேல்முறையீட்டு வாரியத்தின் கூட்டம் ஒழுங்குபடுத்தப்படலாம். உதாரணமாக, முறையீட்டாளரும், UDI எனப்படும் வெளிநாட்டவர் திணக்களமும், முறையீட்டாளரினால் கொடுக்கப்பட்ட தரவுகள்பற்றி உடன்பாடு கொண்டிருப்பின், அதாவது, முறையீட்டாளர் கொடுத்த விளக்கங்களின் அடிப்படையிலே, UNEயிற்கு அனுப்பப்பட முன் UDIயினால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பின், முறையீட்டாளரை நேரடி வருகைக்கு அழைக்காமலே, மேல்முறையீட்டு வாரியத்தின் கூட்டம் பெரும்பாலும் ஒழுங்குபடுத்தப்படுகிறது. ஆனால், முன்னர் கொடுக்கப்பட்ட தரவுகள் சம்பந்தமாய் முறையீட்டாளரினால் மேலதிக வெளிச்சம் கொடுக்கலாம் எனத் தென்படும் வழக்குகளில், மேல்முறையீட்டு வாரியத்தின் கூட்டத்தில், முறையீட்டாளரின் நேரடி வருகை மிக முக்கியமானது.

மேல்முறையீட்டு வாரியத்தின் கூட்டங்களில் வாரியத்தலைவருடன் இரண்டு குழு உறுப்பினர்களும் கலந்து கொள்வர். வாரியத்தின் கூட்டத்தில் விவாதிக்கப்பட வேண்டிய விடயங்களைத் தயார் செய்யும் பொறுப்பு வாரியத்தின் செயலகத்தைச் சார்ந்தது. வாரியத்தலைவர் கூட்டத்திற்கு முன்பே, கூட்டத்தில் கருத்தில் கொள்ளப்படும் விடயங்கள் சம்பந்தமான ஆவணங்கள் அங்கத்தவர்களுக்கு கிடைக்கும்வண்ணம் செய்ய வேண்டும். இவ்வாரியக்கூட்டங்களில் சம்பந்தப்பட்டவர்கள் தவிர வேறு வெளியார் எவரும் பங்குபற்ற முடியாது.

வாரியக்கூட்ட ஆரம்பத்தில், வாரியத்தலைவர் எந்த வழக்கு அல்லது விடயம்பற்றி முடிவெடுக்கப்படவிருக்கிறது என்பதுபற்றி விளக்குவதோடு, கூட்டத்தில் பங்குபற்றுவோரை அறிமுகம் செய்து வைத்து முறையீட்டாளரையும் விசாரிப்பார். கூட்டத்தில், வாரியத்தாலும், தனது வழக்கறிஞராலும் கேட்கப்படும் கேள்விகளுக்கு, முறையீட்டாளர் பதிலளிப்பார். முறையீட்டாளரின் வழக்கறிஞர் சுருக்கமாக தனது கட்சிக்காரர் சார்பில் இறுதி வாதத்தை முன்வைக்க சந்தர்ப்பம்

அளிக்கப்படும். வாரியக் கூட்டத்தில், வாரியத்தின் உறுப்பிளர்களின் பெரும்பான்மையினரின் முடிவை அடிப்படையாக வைத்தே இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

மேல் முறையீட்டு வாரியத்தினால் தனிப்பட்ட வழக்குகளில் எடுக்கப்படும் தீர்மானம், அமைச்சினாலோ, அரசாங்கத்தாலோ அல்லது வாரியத்தின் தலைமைத்துவத்தாலோ மறு ஆய்வு செய்ய முடியாது. ஆனால், தீர்மானமானது மீள் ஆய்வு செய்யப்படுவதற்கு, நீதிமன்றத்தின் முன் கொண்டு வரப்படலாம்.

இறுதியாக புதுப்பிக்கப்பட்ட திகதி 13.11.12